1994 ஏப்ரல் 11]

பொற்கால ஆட்சி நடத்தும் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலே நடத்தப்படும் டாக்டர் ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகம்–ஜெ.ஜெ. என்று நடத்தும் போக்குவரத்துத் துறையிலே ஒரு பொலிவு பெறச் செய்யும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுந்த எனது பெரம்பூர் தொகுதியிலே ஓட்டுநர் பயிற்சிப் பெற்ற, வேலையில்லா இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே இந்தியா முழுவதும் பல திட்டப் பணிகள் இருந்தன. ஆனால் இன்றைக்குத் தமிழகத்தை நோக்கி இந்தியா வந்துகொண்டிருக்கிற நிலையில், திட்டப் பணிகள் இன்றைக்கு நடைப்பெற்றுக் கொண்டிருப்பதற்கு காரணம் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு தான். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்வி ஓட்டுநர் பணியிடங்களுக்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதுதான். அத்தனை ஓட்டுநர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 246, திருமதி ஜீனத் சர்புதீன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

246—

சேப்பாக்கம் தொகுதி குடிசை வாழ் மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.

* 25298—திருமதி ஜீனத் சர்புதீன்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்க்கு விடையளிப்பாரா—

சேப்பாக்கம் தொகுதி, விக்டோரியா விடுதி பின்புறம் மற்றும் பார்டர் தோட்டத்தில் வசித்து வரும் குடிசை வாழ் மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[1994 ஏப்ரல் 11

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும் என்று பைபிளில் சொல்லியிருக்கிறது. அதைப்போல, கேளுங்கள் தரப்படும் என்ற சொல்லுக்கு இணங்க நல்லாட்சி செய்துகொண்டிருக்கும் நமது புரட்சித் தலைவியின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) கண்டிப்பாக செய்து தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. போன வருடத்தில் வேளச்சேரி ஜோதியம்மாள் நகரில் உள்ள குடிசை மாற்றுப் பகுதியில் 320 குடிசைகளுக்கு வீடுகள் கட்டித் தந்திருக்கிறீர்கள். அதற்காக மனசாட்சியுடன் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல எல்.ஜி.என். ரோட்டில் உள்ள குடிசைப் பகுதிக்கு இப்பொழுது கட்டித் தராவிட்டாலும் விக்டோரியா ஹாஸ்டலுக்கு பக்கத்திலுள்ள குடிசைப் பகுதிகளை சீக்கிரமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், அந்தக் குடிசைப் பகுதிக்கும், விக்டோரியா ஹாஸ்டலில் உள்ள சுவருக்கும் 1–1/2 அடி தான் அகலம் இருக்கிறது. பாதை குறுகியதாக இருப்பதால் அங்கே ஒரு விபத்து ஏதாவது நேர்ந்தால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கூடிய சீக்கிரம் அதை கட்டித்தர அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் உள்ளம் கொண்ட தங்க மனத் தலைவியாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிற காரணத்தாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு குடிசை மாற்று வாரியத்தினுடைய மேம்பாட்டுப் பணிகளுக்காக பகுதி—2 திட்டத்திலே 58 லட்சம் ரூபாய் நிதியை முதன் முறையாக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதையும், இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விக்டோரியா ஹாஸ்டலுக்கு பின்புறம் உள்ள 300 குடிசைகள் பக்கிங்காம் கால்வாயை ஒட்டியிருக்கிற ஆட்சேபகரமான பகுதியிலே இருக்கிற காரணத்தாலேதான் அங்கே எந்தவிதமான மேம்பாட்டுப் பணிகளையும் செய்ய இயலவில்லை என்பதையும், இதைப்போல 55 ஆயிரம் குடிசைவாழ் மக்கள் சென்னை நகரத்திலே குடிசைகளிலே, ஆட்சேபகரமான பகுதிகளிலே வசிக்கிறார்கள் என்பதையும், அவர்களை எல்லாம் நல்ல இடங்களில் குடியமர்த்த வேண்டுமென்ற நல்ல உள்ளம் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இருக்கிற காரணத்தாலேதான் அவர்களை எல்லாம் நல்ல இடத்திலே குடியமர்த்த வேண்டும் என்பதற்காக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், இதை உலக வங்கிக்கு அனுப்பியிருக்கிறோம் என்பதையும், இதனுடைய ஒப்புதல் உலக வங்கி அல்லது வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து

கிடைக்கப்பெற்ற பிறகு அவர்களை வேறு இடங்களிலே மாற்றி குடியமர்த்துவது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

ஏழாவது பட்டியல்

1—

பேராவூரணி ஒன்றியம் குறிச்சியில் பொதுத் தொலைபேசி நிலையம் அமைத்தல்.

வினா எண் **2288**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு முதல்அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் குறிச்சியில் பொதுத் தொலைபேசி நிலையம் அமைத்துக் கொடுக்க மத்திய அரசிடம் மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல்அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம். பேராவூரணி ஒன்றியம் குறிச்சியில் தொலைபேசி நிலைய எண் 296, 3-9-93 முதல் செயல்பட்டு வருகிறது.

2—

விருத்தாசலத்திற்கு S.T.D., I.S.D., வசதிகள் அளித்தல்.

வினா எண் **3330**—திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு முதல்அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் S.T.D., I.S.D தொலைபேசித் தொடர்புக்காக ஏற்கெனவே பணிகள் தொடங்கப்பட்டு இன்னும் முடிவுறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணிகளை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?